உ

சிவமயம்.

"துறவி"

செய மலர் 1	திங்கள் வெளியீடு.	பங்குனி இதழ் 3

துறவி

தமிழ் நாட்டுத் துறவிகள் சங்கம்,

திருவண்ணாமலை.

"பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு"

பதிப்பாளர் :

சுவாமி சொரூபானந்தா.

ஆண்டுக் கட்டணம் ரூ 2/- தனி இதழ் அணா 3/-

ADHYAYA
HAIYAR LIBRARY
-41

ஓம்

"துறவி"

பொருளடக்கம்.

எண்			பக்கம்
1	கடவுள் வாழ்த்து	—	2
2	அறிவுரைத் திரட்டு	—	3
3	துறவு நிலையும்— 'துறவி'' வெளியீடும்	—ஸ்ரீ சபாபதி சுவாமிகள்	4
4	மானிடப் பிறவியின் அருமை	—சுவாமி அருணகிரிநாதரவர்கள்	7
5	சிவஞான போதம்	—திருநீ. சண்முகானந்த சுவாமிகள்	9
6	அவிரோத வுந்தியார்	—சுவாமி முக்தானந்தா அவர்கள்	13
7	யோக சிகோப நிஷத் (தமிழ் மொழிப்புரை)	—திரிமூர்த்தி சுவாமிகள்	14

உ

சிவமயம்.

கடவுள் வாழ்த்து.

அரனை யுள்குவீர்
பிரம னூருளெம்
பரனையே மனம்
பரவி யுய்ம்மினே. —சம்பந்தர்.

மழைக்கண் மாமயி லாலு மகிழ்ச்சியா
னழைக்குந் தன்னடி யார்கட மன்பினைக்
குழைக்குந் தன்னைக் குறிக்கொள வேண்டியே
யிழைக்கு மென்மனத் தின்னம்ப ரீசனே. —அப்பர்.

ஆமாறுன் றிருவடிக்கே யகங்குழையே னன்புருகேன்
பூமாலை புனைந்தேத்தேன் புகழ்ந்துரையேன் புத்தேளிர்
கோமானின் றிருக்கோயி றூகேன்மெழுகேன் கூத்தாடேன்
சாமாறே விரைகின்றேன் சதுராலே சார்வானே.
—மாணிக்கவாசகர்.

தூயதமிழ் நாட்டுத் துறவிகள் சங்கமென்றும்
ஞாயிறுபோன் மக்களுக்கு நன்மைசெயத்—தாயாகும்
உண்ணா முலையாம் உமைசே ரொளிப்பிழம்பாம்
அண்ணா மலைதுணையா மால்.

வாழ்த்து.

அந்தண ரென்னும் அறவோர் அநுபவத்தை
இந்த வுலகோர்க் கெடுத்துரைக்க—வந்த
துறவி வெளியிடுந் தூயதமிழ் நாடுந்
துறவறமும் வாழியமா தோ.

அறிவுரைத் திரட்டு

செந்தமிழ்த் தேனீ திரட்டியது.

1 நீ உன்பால் நிகழும் குற்றத்தைப் பிறர் அறியாவண்ணம் மறைக்க முற்படுவதினும், அக்குற்றம் உன்பால் நிகழாவண்ணம் மாற்ற முற்படுவதே நல்லது.

2 வினையை வெல்லும் ஆற்றலும் அடையலாம் ஆனல் அதற்குத் தக்க நோன்பை மேற்கொள்ள வேண்டும்.

3 யாத்திரை செய்வதனல் பல அனுபவங்கள் ஏற்படுவதே யன்றி மன அமைதியும் ஏற்படுகின்றது

4 நாம் சும்மா இருந்தாலுங் கூடத் தானகவே நம்முடைய யாத்திரை தென்றிசை நோக்கி நடக்கின்றது. இதனை ஒவ்வொரு கணமும் சிந்தையிற் கொள்ளவேண்டும் ஆவனவற்றை உடனடியாகச் செய்ய வேண்டும்

5 மக்கள் சஞ்சரியாத தனியிடத்திலாவது அல்லது நல்ல ஒழுக்கம் நிறைந்த பெரியார்கள் கூட்டத்திலாவது வாழ்வதே வைராக்கியத்துக்கு ஏற்றது

6 அகல உழுவதினும் ஆழமாக உழுவதே நல்லது என்பதற்கிணங்க பலநூல்களைக் கற்க முற்படுவதினும் ஒரு நூலையேனும ஐயந்திரி பகலக் கற்பதே சிறப்புடையதாம்

7 மேட்டிலுள்ள தண்ணீர் பள்ளத்திற்குப் போதல் இயல்பு அதுபோல மனமானது தீயநெறியிற் செல்லுவதும் இயல்பே. பள்ளத்திற் போகும் நீரை அணைகட்டித் தேக்கி வேண்டும் இடங் கட்குத் திருப்பிவிட்டால் மிக்க பயன்தரும். அதுபோலத் தீய நெறியிற் றலைப்படும் மனத்தைத் தடுத்து நிறுத்தி நன்னெறிகளிற் செலுத்தினல் மிக்க பயன் அடையலாம்

8 சகிப்புத் தன்மையே ஒவ்வொருவருக்கும் சிறந்த அணி கலனகும். ஆதலினல் சகிப்புத் தன்மையில்லாதவர்கள் நாளடைவில் பழகிக்கொள்ள வேண்டும். அதன் நன்மை நாளடைவில் தெரியவரும்.

9 நன்மையே செய்துவரும் நல்லோர் துன்பமெய்தவும் தீமையே செய்யுந் தீயர் துன்பமெய்தாது நலம் பெறுவதுங் கண்டு தீமைச் செயற்குப் பயன் நலன் எய்தல் எனக் கொள்ளக்கூடாது. நல்லோர் தம்மையறியாமற் செய்த தீமைக்கு வரும் இன்னலையே

உடனடியாகப் பெறுகின்றனர். தூய ஆடையிற்றெரியும் மாசுபோலத் தெளிவாக விளங்குகின்றது. அழுக்காடையில் எத்துணை மாசுறினும் தெரியா வாறுபோலத் தீயர்பால் முன்னுள்ள தீமைகளோடு இவையுஞ் சேர்கின்றன. பின்னர் அவை வட்டியும் முதலுமாகத் திருப்பித் தரப்படும்.

10 சுகமும் துக்கமும், செல்வத்தினுலும் வறுமையினுலுமே வருவன அல்ல, வினையும், மன நிறைவுமே காரணம். செல்வந்தர் பலர் அல்லலுறுவதும் வறியர் பலர் மகிழ்ச்சியிற்றிளைத்தலும் காண்க

★

துறவு நிலையும், "துறவி" வெளியீடும்.

ஸ்ரீ சபாபதி சுவாமிகள்,
ஸ்ரீ மௌன சுவாமிகள் மடம், சிதம்பரம்.

உயிர்ச்சார்பு பொருட்சார்பு ஆகிய புறமாய வற்றிலும் அகமாய உடம்பினிடத்தும் உண்டாம் பற்றுக்கள் அனைத்தையும் முற்றத்துறந்தவனே துறவியாம். அத்தகைய துறவிகள் ஒன்றுகூடிச் சங்கம் நிறுவுதலும், பத்திரிகை நடாத்துதலும், கட்டுரைகள் வரைந்து தருதலும் முதலியவாய பிறர் செய்யும் பொதுப்பணிகளி-லீடுபடின் "வேறுமொருவ னுடனிருப்பும் வேண்டா தவத்திற் கென்பதொடு, மாறுய்......"ப்பற்றை விளைவிப்பதாமாதலின் அத் துறவு நிலைக்கு இழுக்கு ஆகாதோ எனின், ஆகாது. என்னை?

இல்லற நெறியினிற்பார்க்கேயன்றித் துறவற நெறியினிற் பார்க்கும் செய்யத் தகுவன இவை தவிரத் தகுவன இவைஎன விதி நூல்கள் விதித்தோதுதலான் விதித்தனவற்றைச் செய்தற்கண்ணும், விலக்கியவற்றை ஒழித்தற்கண்ணும் மனஎழுச்சி உண்டாங்கால்பற்றும் உவர்ப்பும் தோன்றுதல் இயல்பாம் அன்றே, அவ்வாறு உண்டாம் உவர்ப்பும் பற்றும் தான் செய்யவேண்டும் கடன் எனக் கொண்ட காலத்து இழுக்கு ஆகாதவாறுபோல இஃதும் ஆம் என்க.

இன்னும் அழிதன் மாலையவாய எல்லாப் பொருள்களிடத்தும் பற்றுக்கொள்ளின், உறுதிப்பொருளாய்ச் சிறந்திலங்கும் வீட்டின் பாற்கொள்வதாய பற்று உறுதியுடைத்தாகாது தளர்வெய்துமாதலின், ஏனைப்பொருள்களிடத்துப் பற்று நிகழக்கூடாதென்பதே யன்றிப் பற்றே உள்ளத்தின்பால் நிகழக்கூடாதென்பதும் அன்றென்க

இதனை "பற்றற்றான் பற்றினைப் பற்றுக, பற்றுவிடற்குப் பற்றுக" எனப்பகுத்தோதியவாற்றானும் உணர்க. இதனானே தன்னலங்கருதி அவாவிச் செய்வனவே பற்றுடைய தாமன்றித் தன்னலங் கருதாது செய்வனவும் பிறர் நலங்கருதிச் செய்வனவும் ஆய அனைத்தும் பற்றென்பதின்பாற்பட்டுத் தீங்கு விளைத்தற்கேது வாகாதென்பதும் கண்டுகொள்க.

மிக்க இளம் பருவமுடைய குழவியொன்று விலை மதிப்பில் ஏற்றமுடைய பொற்சங்கிலி, அல்லது நாணயம் முதலியவற்றை இறுகப் பற்றிக்கொண்டு, பெற்றோர் முதலியவர்கள் வலிந்து பற்றி ஈர்க்கினும் கொடாது பிடிவாதத்துடன் அழும் நிலையுடையதாய் இருக்கக் கண்டு, அதனை உபாயத்தினாற்கவர எண்ணி வாழைப் பழம் முதலிய தின் பண்டங் காட்டி ஏமாற்றவும் ஏமாறுவிடத்து எவ்வாறு தாம் கொண்ட உயர்வுடைப் பொருளை இழந்திடாத நிலைமையும், சிறு பொருள்களாளாய பழம் முதலிய தின் பண்டங்களை அவாவி அதனைப்பற்றின் தாங்கொண்ட உயர்வுடைப் பொருளை இழக்கும் நிலைமையும் எய்துகின்றதோ அவ்வாறே அழிதன் மாலையவாய சிறு பொருள்களிடத்து வைக்கும் பற்றானது பெரும் பொருள் பெறு வதற்குத் தடையாகும் என்பதனை அறிந்து கொள்க. இதனானே பொய்யாய் அழியும் பொருள்களிடத்துப் பற்று வைத்தலாகா தென் பதன்றிப் பொதுப் பணிகளிலீடுபடலாகா தென்பது அன்று என்பதைக் கருத்தாகக்கொள்க.

இவ்வாறாயின் நிருவிகற்பசமாதி நிலையிலுள்ள பெரியார்கள் கூட இவ்வாறாய பணிகளில் முற்படுதல் தகுமா? அது அவர்கள் நிலைக்கு இழுக்குதலாகாதா எனின், அவர்கள் அந்நிலைமையிலிருப் பினும் மனம் புறம்போந்த நேரங்களிலாவது தாம்கண்ட அநுபவப் பொருளைப் பிறரறிய எடுத்துக்கூறுதல், எழுதுதல் முதலிய செய்யின் எல்லாவற்றினும் மிக்க பெரும்பயன் விளைப்பதா மென்பதறிக. தாம்கண்ட அநுபவப்பொருளை பிறரறிய எடுத்துரைத்தல் எழுதச் செய்தல் முதலிய வற்றான் மனம் புறத்தே போந்து தன்னிலையிற் சிறிது அலைவுறுதலும் இன்னும் சொற்பிழை, எழுத்துப்பிழை முதலிய வாராமற் காத்தற்கண் தன்பால் அபிமானம் உண்டாதல் முதலியவற்றால் நிலைசோர்தலும் கூடுமே எனின் அவ்வாறாய பெரி யாரது அநுபவவுரைகளை மக்கள் குற்றங்காணாது அனைத்தையும் சுவாநுபூதி வாக்காகவே கொள்வர் ஆகலானும், "ஓடும் பொன்னும் உறவும் பகையும் ஓர், கேடும் செல்வமுங் கீர்த்தியும் நிந்தையும்......" ஒப்ப நோக்கும் பெற்றியராகலான் அவர் கூறும் குறைபாட்டைச் சிந்தை செய்யார் ஆகலானும், அறியாதார் ஒரோவிடத்து நிந்தை செய்யினும் அதனால் அவர்க்காவதோர் காரியம் இன்று ஆகலானும் குறைபா டொன்று மின்மையுணர்க. இதனால் பிறவுயிர்கள் நலம்

பெறற் பொருட்டுத் தமது அநுபவ உரைகளை வெளியிடுவதனல் இருபாலும் நயம் பயப்பதேயாம் என்பதும், இவர்களால் கூறப் பெறும் அநுபவ உரைகள் ஏனையர்பாற் கிடைக்கப்பெறு என்பதும் கண்டு தெளிக. தமக்குப் பயனுகக் கொள்ளும் காலம் ஒழித்து எஞ்சியுள்ள நேரங்களிற் சிறிது நேரத்தினை அதற்காக்கின் அதனல் அவர்க்கு வருவதோர் பெருந்திங்கின்மையும் உணர்க.

திருமூலநாயனுர் முதலிய பெருந்திருவினர் பலர் தாம் நிருவிகற்ப சமாதியினுணர்ந்தவற்றைப் பிறர்க்கும் பயன்படும்வண்ணம் திருமந்திர முதலிய நூல்வடிவில் எடுத்துரைத்தியதூஉம் இப்பெற்றியனதேயாமெனக. இவ்வாறன்றி வாளா இருந்து "எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே, அல்லாமல் வேறொன் றறியேன் பாராபரமே" எனக்கூறி வருவது வெறும் வாசா கைங்கரியமாயொழியுமென்றுணர்க.

இனி இவர்களன்றி கருவிநூல்களொடு வீடுபயக்கும் ஞானநூல்களையும் ஐயந்திரிபற ஓதியுணர்ந்து பொருள் நிச்சய முணர்ந்த பெரியார் பலர் அவ்வளவினமையாது அவற்றைத் தம் அநுபவ நிலையிற் கோடற்கு இவையெல்லாம் பெரிதும் தடையெனக் கூறலாமாயினும், அவர்களும் சிறிதுபோது இதற்கென வகுத்து ஓதுக்கின் அதனுலெய்தும் இடையூறு பெரிய தொன்று மிலமை யானும், தாங்கற்ற நூற்பொருளை மீண்டுஞ் சிந்திக்கவும நுண் பொருள்களை ஆராயவும் நேரிடுவதால் அவாகட்கஃதோர் ஆக்கமேயா மெனவுங் கொள்க. மிகப் பற்றற்ற நிலையில் விளங்கிய திருநாவுக்கரசு சுவாமிகள் முதலிய பெரியார் பலர் தாம் அநுபவித்தறிந்த நிலைகளையெல்லாம் நம்மனோர் உய்யும் வண்ணம் தேவாரப் பாடல்களாக அருளியதேயன்றி "..... என் கடன் பணி செய்து கிடப்பதே" என விதந்து கூறியும், உழவாரத் திருப்பணி முதலிய பணிகளைத் தாமே செய்து காட்டியும் உணர்த்திய வாற்றானும் அறிக.

துறவு பெற்று இப்பெரு நிலைகளை யெய்துதற்கு அவாவுடையராய் அடிப்படை நிலையில் நின்று விளங்கும் அனைவரும் இப்பொதுப் பணிகளிலீடுபடுவதற்கென ஒரு நேரம் வகுத்துப்பணி புரிந்து வருதல் சால்புடைத்தாம் என்பதையும், இப்பெற்றியர் தம் பணிகளையே மக்கள் பெரிதும் பெருஞ்சுட்டு வைத்துப்பேணுகின்றனரென்பதையும் உலகியல் நிலையிலேயே வைத்துக் கண்டு கொள்க

இனி முற்காலத்திலிருந்து தற்காலம் வரையிலும் இருந்து வந்த துறவு நிலைபெற்ற பெரியார் பலரும் தங்கருத்துக்களையெல்லாம் நூல் வடிவில் இயற்றித்தந்து வெளியிட்டமையும், உரை நூல்களாக எழுதிப் புலப்படுத்தியமையும், அண்மையில் துறவு நிலைபெற்று வாழ்ந்தவராய திருகலியாணசுந்தர யதீந்திரர் முதலானோர் சித்தாந்தம்

முதலிய பத்திரிகைகளின் ஆசிரியராயமர்ந்து நடாத்தி வந்தமையும் இன்றும்கூட ஸ்ரீ இராமகிருஷ்ண மடத்தின் குழுவினர் பலரும் இவ்வாறே பொதுப்பணிகளிலீடுபடுதலினால் நன்மக்கள் பல்லோராலும் நன்கு மதிக்கப்படுதலையும் கண்டு கொள்க

மேல் எடுத்துக் காட்டிய இவற்றானே இச்செயல்கள் துறவு நிலைக்கு இழுக்குடையதாகா தென்பது கண்டு தெளிவதுடன் 'துறவி' வெளியீடு சிறந்து விளங்குவதற்கு ஏற்ற ஆக்க வேலைகள் அனைத்தினையும் ஊக்கமுடன் தம்மாலியன்றவரைச் செய்வதற்கு முன்வருக.

★

மானிடப் பிறவியின் அருமை.

சுவாமி அருணகிரிநாதர் அவர்கள்,
த. நா. து. சங்க அமைப்பாளர்,
குளப்பாக்கம், சென்னை.

முன் (8-ம் பக்கம்) தொடர்ச்சி.

நமது முன்னோர்கள் எழுதிவைத்த இலக்கிய நூல்களிலுள்ள சொல் நயம் பொருள் நய முதலியவைகளையும் அறம், பொருள் இன்பம், வீடு முதலிய பயன்களை விளக்கிக் கூறும் நூல்களையும் ஆராய்ந்தறிந்து எடுத்துச் சொல்லி தானும் கடைப்பிடித் தொழுகி பிறரையும் கடைபிடித் தொழுகி இன்புறச் செய்யாமல் அவைகளி லுள்ள குறைபாடுகளையே ஆராய்ந்து தேடி எடுத்துக்கூறி இழிவு படுத்தி எள்ளி நகையாடுவதும், சீலம், ஒழுக்கம், புலனடக்கம், தெய்வ வழிபாடு, சீவகாருண்யம் முதலியன சிறிதும் இல்லாமலும், கண்டதே காட்சி, உண்டதே உணவு, கொண்டதே கோலம், எனத் திரிவதும், பள்ளியில் கற்றுத்தேர்ந்து தெளிவடையு முன்பே பள்ளியிற் பயிலும் அழகிய பெண்களைக் கண்டு மகிழ்ந்து காதல் கொண்டு புகழ்ந்து கைகோர்த்துத் திரிந்து களவியல் முறையென்று கூடிமகிழ்ந்தின்புறு வதும், பின் கண்டார் சிரிக்க காப்பாற்ற வழியின்றிக் கைநழுவ விட்டு விடுவதும், காலங் கழிக்க மற்றொரு காரிகையைக் காதலிப்பது போல் கனிமொழி பேசி மயக்கி படம் பிடித்துப் பார்த்து மகிழ்ந்து நிற்பந்தப் படுத்தி வாழ்க்கை ஒப்பந்தம் செய்து சினிமா வாழ்க்கை சில நாட் செய்து இருவர் மனஒற்றுமையில் மாறுபாடுற்றால் பெற்ற மக்களைக் கூட வாரம் பிரித்து வாழ்க்கையொப்பந்தத்தை மாற்றிப் பிரிந்துவிடு வதே மதிப்பிற்குரிய நாகரீக மனித வாழ்க்கை யெனவும் பேசித் திரிகின்ற மதிவாணர்கள் தம் அறிவை பகுத்தறிவென எண்ணுதல் பேதமையாம்.

பகுத்தறிவின் இலக்கணம் ஆனல் பகுத்தறிவின் இலக்கணந்தான் என்னையோ வெனின் கூறுதும் மக்கட் பிறவியில் அரிதாய் அமைந்திருக்கும் ஐம்புலன்களும் தத்தமக்கு வேண்டிய விடய விச்சையாலும் பொருளாசையாலும், விடயங்களிலுள்ள நன்மை, தீமை, உயர்வு, தாழ்வு, தூய்மை, மலினம் முதலியவைகளை ஆராய்ந்து சீர்தூக்கிப் பாராமலும் ஐம்பொறி வாயிலாக ஓடி விடய போகங்களில் வீழ்ந்து துன்பங்களை யடையவிடாமல் புலன்களைத் தடுத்து நிறுத்தி நேர்படும் விடயங்களிலுள்ள மேற்கூறிய பண்புகளை பகுத்தறிந்து தியனவாயின் நீக்கி நல்லனவாயின் அவைகளை நல்வழியில் புலன்களைச் செலுத்தி துய்த்தின்புறச்செய்யும் நல்லறிவே பகுத்தறிவின் இலக்கணமென்பதை

"சென்ற விடத்தாற் செலவிடா தீதொரீஇ
நன்றின்பா லுய்ப்ப தறிவு" —என நமது தெய்வப் புலவர் தமிழ்மறையில் தெளிவாய் எடுத்து விளக்கியிருக்கின்ருர். ஆகவே இம்மை மருமை இன்பங்களை நுகர்வதற்கும் பிறவிப்பயனுகிய முத்தி இன்பத்தை அடைவதற்கும் ஏதுவாகிய அறிவே பகுத்தறிவாம். அதனைப் பயன்படுத்தி வாழும் மக்களே உயர்ந்தவரும் சிறந்தவருமாவர் இத்தகைய மேன் மக்களைத்தான் "உயர்திணை யென்மனார் மக்கட் சுட்டே" என்று தொல்காப்பியர் உயர்த்திக் கூறுகின்ருர்.

இத்தகைய பகுத்தறிவுடைய மனிதப் பிறவியும் கூன், குருடு. செவிடு, ஊமை நொண்டி, முடம், உறுப்புக் குறைவு முதலிய குறைபாடின்றிப் பிறத்தல் அரிதாம் அவயவப்பழுது குறைவுகளின்றி அழகிய மக்கட் பிறவி வாய்க்கினும் விலங்கு நீர்மையினின்றும் மக்களைப் பிரித்து உயர்ந்த பண்புடைய மக்களாகச் செய்விக்கவல்ல கல்வியை விருப்போடு கற்றல் அதனினும் அரிதாம்.

அப்படி கற்க வேண்டிய (அறம், பொருள், இன்பம், வீடு எனும் நாற்பயனையும் தரத்தக்க) நூல்களை ஐயந்திரி பறக் கற்றுத் தெளிதல் அதனினும் அரிதாம். தாம் கற்ற அற நூல்களில் கூறிய அறநெறியில் அறவொழுக்கத்தில் அறமுறையில் தவருதொழுகும் சான்றோர் எனப் பெயர் பெறுதல் அதனினும் மிக அரிதாம். இத்தகைய சிறப்புகட்கும் பெருமைக்கும் ஏதுவானதால் "எண்ணரிய பிறவிதனில் மானிடப் பிறவிதான் யாதினும் அரிதரிதுகாண், இப்பிறவி தப்பினல் எப்பிறவி வாய்க்குமோ ஏது வருமோ அறிகிலேன்" என்று தாயுமான வள்ளலும் வியந்தோதியிருக்கிருர்கள் இத்தகைய மக்கட் பிறவி ஓர் ஆன்மாவுக்கு வாய்த்தல் அருமையினும் அருமை என்பதற்கு உவமை கூறுவாம்.

"எறியுங் கடலில் நுகத்துளையில் யாமைக் கழுத்துப் புகுவது போல், பொறிவெம் பிறவி யனேகத்தாற் புருடன் விவேகியெனப் பிறந்து" என ஞானவாசிட்டம் கூறுகின்றபடி சிறிய துளைகளையுடைய ஓர் நுகத்தடியானது அலைகளை வாரி யெறிகின்ற பெரிய

கடலிடையில் வீழ்ந்து சுழன்று சுழன்று புறண்டு புறண்டு மேலுங் கீழும் எழுந்தும் விழுந்தும் உழலவும் மிக நுண்ணிதாகிய (ஸ்பரிச) உணர்ச்சியுடையதும் சிறு துரும்புபடினும் உடனே தனது ஐந்துறுப் புக்களையும் சுருக்கி உள்ளே இழுத்துக்கொண்டு பதுங்கிவிடக்கூடியது மாகிய ஆமையானது அக்கடல் நீரின் உள்ளிருந்து தற்செயலாய் தனது ஐந்து உறுப்புக்களையும் வெளியில் நீட்டிக் கொண்டு மேலே வரவும் அச்சமயம் அந்த நுகத்தடியும் நேர்படவும் அந்த நுகத் துளையில் ஆமையின் கழுத்துத் தட்டாமல் நுழைந்துவிடின் அச் செயல் எவ்வளவு அரிதோ அவ்வளவு அருமையினும் அருமையாம் மக்கட் பிறவி ஓரான்மாவுக்குக் கிடைத்தல்.

இதனாலன்றோ நமது மணிவாசகப் பெருந்தகையார் "புல்லாகிப் பூடாய் புழுவாய் மரமாகிப், பல்விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிக், கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய், வல்ல சுரராகி முனிவராய்த் தேவராய், செல்லாஅநின்றவித் தாவர சங்க மத்துள், எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேனெம் பெருமான், மெய் யேயுன் பொன்னடிகள் (முடிவாகிய) இம்மானிடப்பிறவியில் கண்டின்று வீடுற்றேன் என்று கூறியிருக்கிறார்கள். (தொடரும்)

சைவ சித்தாந்தம்.

சிவஞான போதம்.

திருநீ. சண்முகானந்த சுவாமிகள்,
ஸ்ரீ பிரமானந்த சுவாமிகள் மடம், மதுரை.

முன் (6-ம்பக்கத்) தொடர்ச்சி.

சிறப்புப் பாயிரம்.

சிறப்புப் பாயிரத்தினிலக்கணம் இனைத்தென்பதையும், அஃது இன்றியமையாது நூன் முகப்பில் வேண்டற்பால தென்பதையும், அதனை யியற்றற் குரியார் யாவரென்பதையும், தொல்காப்பியத்து நச்சினார்க்கினியம் முதலியவுரைகளுள்ளும் அதன் பாயிர விருத்தி யுள்ளும் கண்டுகொள்க. விரிக்கிற் பெருகும்,

காமிகம் முதலிய சைவாகமங்களின் ஞானபாதப் பொருளை யாராயு மாராய்ச்சியே இந்நூலின்கண் ணெடுத்தோதப்படுவது. இவ் வாராய்ச்சிக்குப் பயன் யாதோவெனவும், இதனைக் கேட்டற்குரிய வதிகாரி யாவரெனவும், இதனானுணர்த்தப்படும் விடயம் யாதெனவும், இதனைக் கேட்குமுன் ஒரு தலையா னுணர்தற்பாலவை யாவை

யெனவும், இதன் பெயர் யாதெனவும், இது யாங்ஙன் வழங்குவ தெனவும், இதன் முதனூல் யாதெனவும், இதனைச்செய்தார் யாவ ரெனவும், கேட்போர்க்குப் பலவாற்றான் நிகழும் ஆசங்கை நீங்கி, இதனைக் கேட்டற்குரிய மனவெழுச்சி யுண்டாதற் பொருட்டு இந் நூன் முகத்துரைக்கப் படுவதாகிய சிறப்புப்பாயிரம் வருமாறு:—

மலர்தலை யுலகின் மாயிருள் துமியப்
பலர்புகழ் ஞாயிறு படரின் அல்லதைக்
காண்டல் செல்லாக் கண்போல் ஈண்டிய
பெரும்பெயர்க் கடவுளிற் கண்டுகண் இருள்தீர்ந்
தருந்துயர்க் குரம்பையின் ஆன்மா நாடி
மயர்வற நந்தி முனிகணத் தளித்த
வுயர்சிவ ஞான போத முரைத்தோன்
பெண்ணைப் புனல்சூழ் வெண்ணெய் சுவேதவனன்
பொய்கண் டகன்ற மெய்கண்ட தேவன்
பவநனி வன்பகை கடந்த
தவராடி புனைந்த தலைமை யோனே.

இதன் பதப்பொருள்:— மலர்தலை உலகின்—பரந்த இடத்தையுடைய உலகின்கண் பொருந்திய, மாயிருள் துமிய—பெரிய புறவிருள் அழியு மாறு, பலர் புகழ் ஞாயிறு—பலமதத்தாரானும் புகழப்படுகின்ற சூரியன், படரின் அல்லதை—உதயமானாலன்றி, காண்டல் செல்லாக் கண்போல்—காணுதலைச் செய்யமாட்டாத கண்ணொளிபோல, அருந் துயர்க் குரம்பையின்—பொறுத்தற்கியலாத் துன்பங்கட் கெல்லாம் நிலைக்களமாய்க் காணப்பட்ட உடம்பினால், ஆன்மாநாடி—காணப்படாத ஆன்மாவையும் பரமான்மாவையும் கருதலளவையான் ஆராய்ந்து அவற்றின் பொதுவியல் புணர்ந்து, கண்இருள் தீர்ந்து—அவ்வுணர்ச்சி யானே ஆணவ மலத்தினின்றும் நீங்கி, ஈண்டிய—அம்மலம் நீங்கிய வழி எல்லா நூல்களும் தன் பொருளே யாகத் திரண்டு கூடிய, பெரும் பெயர்க் கடவுளின்—மகாவாக்கியத்தா னெடுத்தோதப்படுங் கடவுளது திருவருளானே, கண்டு—அவற்றின் சிறப்பியல்பை அனு பூதியிற் கண்டுணர்ந்து, மயர்வு அற—மயக்கம் நீங்கிச் சிவானுபவம் பெறுதற்பொருட்டு, நந்தி—சீகண்ட தேவற்பாற் கேட்டருளிய நந்தி யெம்பெருமான், முனிகணத்து அளித்த—சனற்குமார முனிவர் முதலியோருக்கு உபதேசித்தருளிய, உயர்—சரியை முதலியவற்றைக் கூறும் நூல்களின் மேம்பட்ட, சிவஞான போதம்—சிவஞானபோத மென்னும் வடநூலை, உரைத்தோன்—மொழி பெயர்த்துப் பொழிப் புரை செய்தோன், பெண்ணைப்புனல்சூழ்—பெண்ணையாற்றாற் சூழப் பட்ட, வெண்ணெய்ச் சுவேதவனன்—திருவெண்ணை நல்லூரின்கண் அவதரித்தருளிய சுவேதவனப் பெருமாளென்னும் பிள்ளைத் திருநாம முடையான், பொய்கண்டு அகன்ற—பொய்ச்சமயப் பொருள்களைக் கண்டு நீக்கிய காரணத்தாற்பெற்ற, மெய்கண்ட தேவன்—மெய்கண்ட தேவனென்னுஞ் சிறப்புத் திருநாம முடையான், பவம் நனி வன்

பகை கடந்த—பிறவியாகிய மிக்க வலியபகையினைத் தாண்டிய, தவர் அடி புனைந்த தலைமையோன்—தவத்தோர் தனது திருவடியைப் புனைந்து கோடற்கேதுவாகிய தலைமைப் பாட்டினையுடையோன். என்றவாறு. இருள் துமிய ஞாயிறுபடரின் அல்லதைக் காண்டல் செல்லாக் கண்போல் நாடித் தீர்ந்து நந்தி மயர்வறவளித்த சிவஞான போதமுரைத்தோன் சுவேதவனன், மெய்கண்ட தேவன், தலைமை யோன் எனக் கூட்டிக் காண்க

மாயிருள் என்ற விடத்து ஆகாரமுன்னும் யகரவுடம்படுமெய் அருகி வந்தது. மாயாத விருளினின்றும் நீக்குதற்குமாயிருள் என்று றெனக்கொண்டு வினைத்தொகையாக்கினும் அமையும். மற்றைய வொளிகளால் நீங்காது எங்கும் நிறைந்த புறவிருளை யொருபாலுதய மாகிய சூரியன் நீக்குதல்போல, ஏனைச் சமய நூல்களால் நீங்காது யாங்கணும் நிறைந்த அகவிருளை யோ–ராகமத்தின் ஒரு படலத்தி லெழுந்த பன்னிரு சூத்திரமும் நீக்கும் என்பதைக் குறிப்பால் உணர்த்த "படரின்" என்றார். அன்றி யென்னும் பொருள் தரவந்த "அல்லது" என்னுங் குறிப்பு வினையெச்சம் "அல்லதை" என ஐயிற்றுடைக்குற்றுகரமாகநின்றது."படரின் காண்டல் செல்லுங்கண்" என உடன்பாட்டு முகத்தாற் கூறவேண்டியவர், இன்றியமையாமை விளக்குதற்கு, "படரின் அல்லதைக் காண்டல் செல்லாக்கண்" என எதிர்மறைமுகத்தாற் கூறினார். "செய்யாமை இல்லை" என்றாற்போல் வனவும் தேற்றப்பொருள் பயப்பவந்தவாறு காண்க. இங்ஙன் கூறுதல் வடமொழி மரபு. கண்மேல் வைத்துக் கூறினாரேனும், கண் காண்டல் சேறற்குப் படர்ந்த ஞாயிறுபோல் என ஞாயிறு போல் என ஞாயிற்றின்மேல் வைத்துரைத்தல் கருத்தாகக்கொள்க.

இருள் நீக்கத்திற்கும் நிருவிகற்பம் சவிகற்பம் என்னும் இரு வகைக் காட்சிக்கும், சூரியன் இன்றியமையாச் சிறப்பிற்றாயவாறு போல, மலநீக்கத்திற்கும் ஆராய்ச்சி அனுபூதி யென்னும் இருவகை யுணர்விற்கும் இன்றியமையாச் சிறப்பிற்றாயது இந் நூலாகலின், "மயர்வற அளித்த சிவஞானபோதம்" என்றார். எனவே பன்னிரு ஞாயிறும் புறவிருள் நீக்கிக் காட்டலேபோலப் பன்னிரு சூத்திரத்தால் அகவிருள் நீக்கி யுணர்த்துவது இந்நூல் என்பதூஉமாயிற்று.

பெரும் பெயர்ப்பொருளே அஞ்செழுத்துப் பொருளும் ஆகலின் பெரும் பெயரோடு அஞ்செழுத்திற்கு வேற்றுமை யின்மை யுங் கண்டு கொள்க. பெரும் பெயர், மகாவாக்கியம், ஒருவார்த்தை, என்பன வொருபொருட் சொற்கள். ஆணவமலம் புறவிருள்போலப் புலனாகாது கருதலளவை யான்றியப்படுவ தாகலின், ஈண்டுக்கண்ணிரு ளென்பது கருதியுணரப்படும் இருள் எனப் பொருள்பட்டு வினைத் தொகையாயிற்று. "குரம்பையின்" என்ற விடத்து ஐந்தனுருபு ஏதுப் பொருட்கண் வந்தது.

பல பொருட்கும் பொதுவாய விலக்கணம் பொதுவியல் பென்றும், ஒருபொருட்கேபுரிய விலக்கணம் சிறப்பியல்பு என்றும், அளவை நூலார் கூறும் பொருள் ஈண்டைக்கு ஏலுமெனக் கொள்ளற்க. ஈண்டுக்கூறப்படுவனவாய பொதுவியல்பினையுஞ் சிறபபியல் பினையும் வடசொற்குப் பரியாயப் பெயராய் கூறப்படுவனவாய தடத்த விலக்கணமெனவுஞ் சொரூபவிலக்கணமெனவுங் கொள்க கொள்ளவே, பெத்தத்தினின்ற நிலைபற்றிக் கூறுமிலக்கணம் ஆகந்துகமாகலின் பொதுவியல்பென்றும், முத்தியினின்ற நிலைபற்றிக் கூறுமிலக்கணம் சகசமாகலிற் சிறப்பியல் பென்றுங் கண்டுகொள்க.

அற்றேல் ஆகமங்கள் இங்ஙன் இருவகைப்படுத்துக்கூறவேண் டியதென்னை? சிறப்பியல் பொன்றே கூறின் அமையாதோவெனின், அமையாது;

"புறச்சமய நெறிநின்று மகச்சமயம் புக்கும்
புகன்மிருதி வழியுழன்றும் புகலு மாச்சிரம
அறத்துறைக ளவையடைந்து மருந்தவங்கள் புரிந்து
மருங்கலைகள் பலதெரிந்து மாரணங்கள் படித்துஞ்
சிறப்புடைய புராணங்கள் உணர்ந்தும் வேத
சிரப்பொருளை மிகத்தெளிந்துஞ் சென்றாற் சைவத்
திறத்தடைவ ரிதிற்சரியை கிரியா யோகஞ்
செலுத்தியபின் ஞானத்தாற் சிவனடியைச் சேர்வர்"

எனச்சிவஞான சித்தியார் கூறுகின்றமையின், ஆன்மாக்களிங்ஙனம் தத்தமக்குரிய படிக்கிரமத்தில் உணர்ந்துவரும் முறைமைக்கேற்ப நூலாருந்ததி நியாயமாக வுணர்த்தல் வேண்டுமாகலின் எனக்கொள்க. அகன்ற, புனைந்த என்னும் பெயரெச்சங்கள் முறையே காரணப் பொருளிலும் காரியப்பொருளிலும் வந்தன.

உயர்சிவஞானபோதம் என்றதனல், யாப்புங் கேட்போரும் நுதலிய பொருளும் நூற்பெயரும், நாடித்தீர்ந்துகண்டு மயர்வற என்றதனல் பயனும், நந்திமுனிகணத்தளித்த என்றதனல் வழியும், வெண்ணெய்ச் சுவேதவனன் மெய்கண்டதேவன் தலைமையோன் என்றதனல் ஆக்கியோன் பெயரும், தமிழ்மொழிவழங்கும் நிலமே இந்நூல் வழங்கும் நிலமென எல்லையும் போந்தவாறுணர்ந்து கொள்க, ஈண்டுக்கூறும் பயன்முதலாயின ஏனை நூல்கட்கேலாது இந்நூற்கே உரிய சிறப்புப் பாயிரமாயவாறு உணர்க. வடநூலார் யாப்பை ஆனந்தரியமென்றும், நுதலிய பொருளை விடயமென்றும், கேட்போரை அதிகாரியென்றும், பயனைப் பிரயோஜனமென்றுங் கூறுப. இஃதன்றி வழியின் வகையாயடங்குந் தொகுத்தல் முதலிய வற்றை யாப்பென்றும், நூல் அரங்கேறுமவைக் களத்துள்ளோரைக் கேட்போரென்றும் கூறிற்பொருந்தா தென்பதைத் "தொல்காப்பியப் பாயிர விருத்தியுட் கண்டு கொள்க.

(தொடரும்)

அவிரோத வுந்தியார்.

சுவாமி முக்தானந்தா அவர்கள்,
சங்கமூர்த்தி ஆனந்தாஸ்ரமம், வியாசர்பாடி, சென்னை.

குருவணக்கம்:— உருவென்றோ அருவென்றோ, ஒன்றென்றோ பலவென்றோ, உளதென்றோ இலதென்றோ, கூறுங்கொள்கை யனைத்திற்கு மொத்ததுப்; சொற்கும் பொருட்கு மப்பாற்பட்டதும், முற்றுங்கடந்த முழுமுதலாயுள்ளதுமான விழுப்பொருள்; ஈண்டுப் பண்பாடில்லா எம்போலிகட்கும், அல்லல் களைவான் கருதி, தானே அருளுருக் கொண்டுகுருவடிவிற் றோன்றியது; நம்போன்றோரைக் கட்டறுத்து வீடேற்றியது அத்தகைத்தாங் குருவடிவத் தனிப்பொருளின், தெருளுருவத் திருவடிகளை வணங்கி, வாழ்தலே நம் மக்கள் வாழ்வுக் குரித்தாய மாண்பாகு மன்றோ?

நூற்பெயர்:— ஓரங்கூறாத உந்தி என்ற பெயருடைத்தா மிந்நூல், விடாப்பகைமை பூண்ட கடவுட்கொள்கையை வேரறக் களைவதா மாதலின், அவிரோதமென்ற அடையொடு கூடியதா மாயிற்று. இஃது காண் பார்க்குப் பாவளவையில் உருவிற் சிறியதேயேனும், பொருளின் அளவையால் உலகெல்லாம் உணர்தற்கும் ஓதுதற்குமிய லாத உலவா ஒண்பொருளை, மடந்தையர் குழுமி மகிழ்ந்தாடும் ஆட்டத்திற்பிணைத்து, அவ்வாட்டத்திற் கேற்ப, அச்சிறுமியர் பாடுஞ் சிறுபாக்கள் கொண்டு தெளிவுறுத்தி வெளியிடுவ தாகின்றது.

உந்தியென்பது:— பேதைமுதல் மடந்தை யீறாய பருவமுடைப் பெண்கள், தந்தகுதிக் கேற்றவாறு ஒன்றுகூடி எதிரெதிர் நின்று, ஒரு பெண், தன துள்ளங்கைகளால் மற்றொரு பெண்ணின் உள்ளங்கைகளைப் பொருந்த அழுத்தி, உதைந்து தள்ளி, பின்விரிந்து மீண்டுங் கைகள் பொருத்தக் கூடும்படி ஆடும் ஆட்டத்தின் பெயராகும் இங்ஙனம் ஆடுங்கால், தங்கட்குக் களிபொங்க அவர்கள் பாடும் பாட்டிற்கும் அவ்வாட்டத்தின் பெயரே கூறப்பட்டது. இங்ஙனம், ஆட்டப் பெயர் பாட்டிற்கும், அஃதமைந்த நூலிற்கு மாயிற்று,

நூல்:— மேல் உலவா ஒண்பொருளென்பதனை ஓரின், அஃதும் பிறந்திறந் துழலும் உயிர்களாலேயே பெறுதற்கு ஒருதலையாயது அவ்வுயிர்களுள்ளும், ஒண்பொருட்பேறு மக்கட் பிறவியினர்க்கே மாளுவதாகும், அவருள்ளும் முன்னைய தவத்தொடரான் மூண்டெழுந்த அறிவுடைய மக்கட்கே ஆய்ந்து அடையப் படுவதாகின்றது அங்ஙனம், அப்பொருள் அடையப்படுவதே பிறப்புரிமை, அதை யடைதற்கே பிறத்தற் றொழிலை மேற்கொண்டன உயிர்களென்பது, உறுதியுள்ள முடிபே யாகும்.

வீடு விளம்புதும்:— உலக நூலனைத்தும் ஓதுகின்ற பயன்கள் நான்கேயாம். இவை, மக்களாலேயே எய்தப் பெறுபவை.

அவையே:—அறமெனப் பொருளென, இன்பமென வீடெனப் பெயரியனவாம். அவை தம் முள்ளும், அறுதியிட்டு இறுதியிற் கூறப்பட்டுள்ளது வீடேயாகும்.

இவ்வீடே ஒப்புயர் வில்லது, சிறந்தவற்றிற் சிறந்த பயனுயுள்ளது, முன்னர்க் கூறப்பட்ட அறமுதலாய மூன்றற்கு முரித்தான இயல்புகளையும் தனக்கே உடையது, குறைவற ஆய்ந்து கொள்ளப்புகின் நான்கு வகையாம் பயன்களுட், இவ்வீடொன்றே என்பது உண்மையினு முண்மை.

இதனை:— அருநான் மறைநூலொ டாகம நூல் மற்றும் உரை சான்ற நூலெல்லாம் ஓதுகின்ற தோரின், பொருள் நான்கே அந்நான்கும் பொய்மையற மெய்மை, தெரிவார் தெரியுங்கால் திங் கொன்று மேவா, நிருபா திகமென்றே நேரே தருமர், பொருளாவது மென்றும் பொன்றுப் பொருளே, இரியாத வின்பமே இன்பஞ் சென்றெய்தற்கு, அரிதாய வீடு மதுவேயாய் நின்றால், உரையாடுவதெல்லாம் ஒன்றுய வின்பப், பெருமானை யல்லவோ? பேதமாய் வேறே, பொருள் நாடி நின்று புலம்புவோர்க் கந்தப், பரமானந்தத்தைப் பகரப் படுமே. என்று கூறியுள்ள கவிமடலென்னும் நூல் வெள்ளிடையாய் விளக்கு இன்றதுங் காண்பாம். (தொடரும்)

★

யோக சிகோப நிஷத்-தமிழ் பொழிப்புரை.

திரிமூர்த்தி சுவாமிகள்.
(ஆனந்தாச்சிரமம், சென்னை.)

முன் (12-ம் பக்கத்) தொடர்ச்சி

(அ ... கை) காமமுதலிய குற்றம் நீங்கிய ஜீவனுக்கு சிவநிலையைக்கூறல் (பொ ... ரை) விருப்பம், வெகுளி, அச்சம், மற்றும் மயக்கம், ஈயாமை, அவ்விதமே அறிவின்மை, பிறப்பு, இறப்பு, இரங்காமை, சோர்வு, சோம்பல், பசி, தாகம் (ம-10) வேட்கை, வெட்கம், பயம், துன்பம், வாட்டம், இன்பம், (இவைகள் முக்திக்குத் தடையாயுள்ளன) இவ்விதத் தடைகளால் விடுபட்ட அந்த ஜீவன் சிவனென்றே சொல்லப் படுகின்றான் (ம-11).

(அ... கை) ஞானயோகங்களால் தடைகள் ஒழிகின்றன எனக்கூறல்

(பொ....ரை) மேற்கூறிய தடைகளொழிதற் பொருட்டு உனக்கு வழியைக் கூறுகின்றேன் இத்தடையை நீக்குவதிற் சிலர் ஞானத்தையே கருவியாகக் கூறுகின்றனர். தனித்த ஞானம் முக்தியின் பொருட்டு ஆவதில்லை. (ம-12) பிரம்மாவே! ஈண்டு யோகமின்றிய ஞானம் முக்தியைக் கொடுப்பதாக எவ்வாறாகும், முக்தியைத் தரும் செயலில் ஞானமின்றிய யோகமும், ஆற்றலற்றதாம் (ம-13) ஆகையால் ஞானத்தையும் யோகத்தையும் முக்தி விருப்புள்ளவன் பயில்வானாக.

(அ....கை) ஞானத்தின் இலக்கணத்தையும் அதன் பயனையும் கூறல்.

(பொ....ரை) வீடுபெற விருப்பமுள்ளவனால் முதலில் ஞானத்தின் இலக்கணமே அறியத் தக்கது. அது அறிதலொன்றையே கருவியாக வுள்ளது (ம-14) எதனால் ஒப்பற்ற சிறந்த பதமான தனது வடிவம் அறியப்பட்ட தாமோ பின்னர் அறியாமை எத்தகையது என ஆராயத்தக்கது (ம-15) அவன் விருப்பம், வெகுளி, அச்சம், முதலிய குற்றங்களால் விடுபட்டவனாகின்றான். எல்லாக் குற்றங்களாலும் மறைபட்ட ஜீவன் எங்ஙனம் ஞானத்தால் விடுபடுவான்? (ம-16) அறிகருவியாகவுள்ள அந்தஞானம் அகன்றதாய், நிறைவாய், தனது ஆன்ம வடிவாக எவ்வாறு உள்ளதோ அவ்வாறே, விருப்பம் வெறுளி முதலிய குற்றங்களுக்கு அகன்ற தனது உருவைக் காட்டினும் வேறாக இருப்புக் கிடையாது (ம-17) பிறகு அத்தகைய ஆன்ம இயல்பிற்கு செய்யத்தக்கதும் விலக்கத்தக்கதுமான கட்டளை எங்ஙனம் கூடும் (கூடாதென்றபடி) பகுத்தறிவுள்ளவன் எப்பொழுதும் இறப்புப் பிறப்பாகிய சுற்றுதலினின்றும் நீங்கி முக்தனாகின்றான் (ம-18) தாமரையிற்றோன்றிய பிரம்மாவே! நாற்றிசையும் நிறைந்த இயல்பினையுடைய அதுவே உண்மைப் பொருளாம். நிறைவினின்றும் உருவ அருவப் பொருள்களாக அதுவே ஆகின்றது. (ம-19)

(அ... கை) போலி ஞானி அஞ்ஞானிக்கு ஒப்புமை கூறல்.

(பொ.. ரை) அதுவே பாபத்தின் மிகுதியால் இறப்புப் பிறப்பாகிய சுற்றுதலை அடைந்தது ஆகாயம்போன்று விரிந்ததும் களங்கமில்லாததும் தூய்மை யானதுமான பரம்பொருள் கண்ணெதிரில் உருவமுள்ளதாயிற்று (ம-20) மற்றும் தோன்றல், நிற்றல், வெளிப்படல் அறிதல் இவற்றின் நீங்கிய பரம்பொருள் உருவமுள்ளதாக எங்ஙனம் வந்தது (ம-21) அந்தச் சகளவடிவம் ஞானமின்றி மோகக் கடலில் எவ்வாறு அடிக்கடி முழுகுகிறது. பருத்த தோள்களுடைய சிவபெருமானே! கூறுவீராக. இன்ப துன்ப முதலிய மயக்கங்களில் உழல்பவர்களது நிலை எங்ஙனம் உளதோ அங்ஙனமே (ம-22) ஞான நினைவாலுளவாய கற்பனைகளால் எப்பொழுது சூழப் பெறுவனோ அப்பொழுது அவ்விருவர்களுக்கும் உயர்வு தாழ்வு இல்லையாகின்றது. பிறவி நிலை இவ்விடத்தில் இருவருக்கும் ஒருபடித்தாம் (ம-23) ஞானத்தின் இயல்பு இங்ஙனம் அறியப்பட்டது. இனி அஞ்ஞானத்தின் இயல்பு யாதாம்.

(அ... கை) போலிஞானிக்கு யோகத்தாலன்றி வீடுபேறு இல்லைஎனல். (பொ....ரை) கற்பனை அறிவிற் சிறந்தவனும் பற்றுறதவனும் அறநெறிகளறிந்தவனும் புலன்வழிப் போக்கொழியாதவனும் (ம.24) உடற்பற்று நீங்காதவனும் யோகப்பயிற்சியின்றி வீடுபெறான். ஜீவர்கள் பண்பட்டவர்கள் பண்படாதவர்கள் என இருவகையாய்க் கருதப்படுகின்றனர். (ம. 25) யோகப்பயிற்சி இல்லாதவர்கள் பண்படாதவர்கள். யோகப்பயிற்சியுள்ளவர்கள் பண்பட்டவர்களாம். உடலனைத்தும் யோகத்திலுண்டான வெப்பத்தால் வாட்டமற்ற ஒளியுருவாதல் வேண்டும் (ம. 26) அறிவின்மையாவது மண்ணின் கூறெனஅறியத்தக்கது. பண் பெறாத உடல் துன்பத்தையே தந்துவிடும்.

(அ .. கை) போலி ஞானிகளுக்குத் துன்ப நீக்கமில்லை எனக்கூறல்.

(பொ... ரை) பண்படாதவன் பண்பட்டவன்போன்று தியானத்தில் அமரினும் இவ்வாறு புலன்களால் இழுக்கப்படுபவன் (ம 27) அவைகளை உறுதியாய் அடக்கினும் மற்ற, குளிர், வெப்பம், இன்பம், துன்பம் முதலியவற்றாலும் ட'லநோய்களாலும் மனதிலுண்டான காம முதலியவற்றாலும், அவ்வாறே (ம, 28) வேறுபல உயிர்களாலும், நிலம்,நெருப்பு,நீர்,காற்று,ஆகாயம் இவைகளாலும் துன்பமேயடைவன், மேற்சொன்ன அந்தந்த இடையூறுகளால் உடல் நைகிறது. (ம. 29) அதனால் மனம் மிகக்குழப்புகிறது அவ்வாறே உயிருக்கு இறுதியுண்டாகில் குழப்பத்துடன் பெருமூச்சே உளதாகிறது. ஆகையால் மக்களது மனம் நூற்றுக்கணக்கான துன்பங்களால் சூழப்பெற்றதாய் கலங்கி நிற்பதாகிறது. (ம. 30) இதுவும் அது பொ....ரை. உடல் அழிவுறும் சமயத்து மனதில் எந்தெந்த விழைவு உள்ளதாமோ அந்தந்த விழைவிற்கேற்பவே ஜீவன் பிறப்பெய்துவன் என இவ்வாறு பிறவியின் காரணம் கூறப்பட்டது (ம. 31) உடம்பு அழிவுறுங்கால் உண்டான நினைவின் வழியே பிறவி யெய்தும். அதை மக்கள் அறிகின்றனரில்லை. ஆகையால் யோகமின்றிய ஞானமும் வைராக்கியமும் மிக்க அனுப்பேயாம். (ம. 32) (தொடரும்)

அச்சுரிமை; ந. வேணுகோபாலன் ஸ்ரீ ஜயலக்ஷ்மி பிரஸ், திருவண்ணமலை
ஆசிரியரும், வெளியிடுபவரும் : சுவாமி சொருபானந்தா. கீழ்ப்பாலூர்,

வேண்டுகோள்.

இத் துறவி வெளியீடு தமிழ் நாட்டுத் துறவிகள் சங்கத்திலிருந்து செய—தை. முதல் வெளி வருகின்றது. இத் திங்கள் வெளியீடு, நாடு, மொழி, சமயம் இவைகளில் பற்றுடைய தன்னலங்கருதா சில துறவி களின் பெருமுயற்சியால் துவக்கப்பட்டதாகும். இதன் நோக்கம், சமய நல்லொழுக்கத்தில் நாட்டுமக்களை நிலை நிறுத்து தலும் அங்ஙனம் நிலை நிறுத்தும் வகையில் பாடு படும்படி துறவிகளை ஊக்குதலும் ஆகும். பொதுமக்களின் ஆதரவினளவே "**துறவி**" வளர்ச்சியுறுவதாகும். பொருள் நிலைக்கேற்ப முதலில் 16 பக்கங்களுடன் வெளிவருகின்றது. அன்பர்களின் ஆதரவு பெருகின அதற்கேற்ப அதிக பக்கங்களில் வெளிவரும். எனவே இதனைக் கண்ணுறும துறவிகளும், இல்லற அன்பர்களும் உறுப்பினராகச் சேர்வதோடு தங்கள் நண்பர் உறவினர்களையும் உறுப்பினராகச் சேர்த்தும், ஆதரிப்பீர்களாயின் "**துறவி**" நந்தண்டமிழ் நாட்டில் தலை சிறந்து விளங்கும் என்பதை பணி வோடும் விண்ணப்பித்துக் கொள்கிறேன்.

—பதிப்பாளர்

குறிப்பு.

" துறவி " என்னும் திங்களிதழில் வெளியிட கட்டுரை எழுதியனுப்பும் துறவிகள் நல்ல கடிதத்தில் தொடர்பு எழுத்தில்லாமல் எழுத்துக்களை நன்கு தெரிந்து கொள்ளும்படி தனித்தனியாக ஒவ்வொரு கடிதத்திலும் ஒரேபக்கத்தில் எழுதி ஒவ்வொரு தமிழ் மாதம் 15உக்குள் அனுப்பிவைக்கும்படி வேண்டுகின்றோம்.